**ஐ.சி.ஆர்.ஏ லங்கா மல்டி பைனான்ஸின் வழங்குனர் மதிப்பீடுகளை மீள் உறுதிப்படுத்துகின்றது**

**05 பெப்ரவரி 2020**

| கருவி | முந்தைய மதிப்பீட்டு தொகை (LKR Mn) | நடைமுறை மதிப்பீட்டு தொகை (LKR Mn) | மதிப்பீட்டு செயல் |
|---|---|---|---|
| வழங்குனரின் மதிப்பீடு | N/A | N/A | (SL)B - (Negative) Reaffirmed |

**மதிப்பீட்டு நடவடிக்கை**

மூடிஸ் இன்வெஸ்டர்ஸ் சேவையின் குழு நிறுவனமான ஐ.சி.ஆர்.ஏ லிமிடெட் நிறுவனத்தின் துணை நிறுவனமான ஐ.சி.ஆர்.ஏ லங்கா லிமிடெட், மல்டி பைனான்ஸ் பி.எல்.சி. இனால் வழங்கப்படும் மதிப்பீடுகளை எதிர்மறை கண்ணோட்டத்துடன் நோக்கி மீளமதிப்பீடு செய்கின்றது.

**காரணிகள்**

MFP (MULTI FINANCE PLC) இன் போதுமான மூலதனம், வருமானம் மற்றும் சொத்துக்களின் தரம் போன்ற மதிப்பீட்டு காரணிகளில் தொடர்ந்து பலவீனமான தன்மையே காணப்படுகின்றது. செப்டம்பர் 2019 நிலவரப்படி நிறுவனத்தின் தொட்டுணரக்கூடிய தேறிய பெறுமதி (ஒத்திவைக்கப்பட்ட வரிக்கு சரிசெய்யப்பட்டது) ரூபா.6 பில்லியனாக காணப்பட்டதோடு இது மத்தியவங்கியின் குறைந்தபட்ச மூலதன தேவைப்பாட்டிற்கும் குறைவாகவே காணப்பட்டது. ஏனெனில் மத்திய வங்கியானது கடன் வழங்குவது மற்றும் வைப்புக்களை ஏற்றுக்கொள்ளுதல் போன்றவற்றில் கட்டுப்பாடுகளை விதித்தமையால் குறித்த காலப்பகுதியில் நிறுவனத்திற்கு குறிப்பிட்ட மூலதன தேவைப்பாட்டை அதிகரித்து கொள்ள முடியாத நிலைமை காணப்பட்டது.

ஒழுங்குமுறை மூலதனத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கான தற்போதைய மூலதன திரட்டும் நடவடிக்கைகளிலான மதிப்பீடு சில ஆறுதல்களைப் தந்தாலும் சரியான நேரத்தில் மூலதன தேவையை பூர்த்தி செய்வது மதிப்பீட்டுக்கு மிக முக்கியமானதாக இருக்கும். இந்த மதிப்பீட்டில் சொத்து தர குறிகாட்டிகளின் காரணிகளும் மோசமான நிலையையே காட்டுகின்றது. அங்கு மொத்த NPA விகிதம் 2018 மார்ச் இல் 9.8% ஆகவும் மற்றும் 2019 மார்ச் இல் 11.6% ஆகவும் காணப்பட்டதோடு 2019 செப்டம்பரில் சுமார் 18.8% ஆக அதிகரித்துள்ளது. நிறுவனமானது கடன் வழங்கும் செயற்பாட்டை அதிகரிக்கத் தவறியதன் விளைவாக நிறுவனத்தின் தொடர்ச்சியான பலவீனமான வருவாய் தோற்றத்தை காட்டுகின்றது, என்பதை மதிப்பீட்டின் போது அறிந்துக்கொள்ளக்கூடியதாக உள்ளது. அதே வேளையில், 2019 செப்டம்பர் உடன்

முடிவடைந்த 6 மாதத்தின் போது நட்டங்கள் விரிவடைந்துள்ளன. அங்கு நிறுவனத்தின் தேறிய நட்டம் LKR 61 மில்லியனுக்கும் அதிகமாக காணப்பட்டதோடு, FY2019 இல் தேறிய நட்டம் LKR 63 மில்லியனாக பதிவாகியது. முன்னோக்கிச் செல்லும்போது, நிறுவனமானது அதன் அதிகரிக்கும் சரிவுகளை கட்டுப்படுத்துவதற்கும் அதன் இலாபக் குறிகாட்டிகளை மேம்படுத்துவதற்குமான கொண்டுள்ள திறன் முக்கியமானதாக காணப்படும்.

இந்த மதிப்பீடு எம்.எப்.பி யின் போதுமான பணப்புழக்க விபரங்களை காட்டுகின்றது. அதன்படி நிறுவனம் சாதகமான சொத்து பொறுப்பு முகாமைத்துவத்தை (ஏ.எல்.எம்) பதிவாக்கியதுடன் அது 2018 ஜூன் இல் நேர்மறையான NPA 6% ஆக பதிவாகியதுடன் ஒப்பிடும்போது, 2019 செப்டம்பர் நிலவரப்படி 8% உடன் பொருந்தாத தன்மையை காட்டுகின்றது.

**எதிர்மறை கண்ணோட்டம்.**

மத்திய வங்கியினால் விதிக்கப்பட்ட வைப்புக்களை ஏற்பதில் காணப்படும் கட்டப்பாடுகள் மற்றும் சொத்து தர குறிக்காட்டிகளில் தொடரான பலவீனம் போன்றவற்றில் எதிர்மறையான தன்மை MFP இன் சுயவிபரத்தில் அதிகரித்த ஆபத்து தன்மை' பிரதிபலிக்கிறது. ஒழுங்குமுறையான தேவைப்பாட்டை பூர்த்தி செய்வதற்காக குறுகிய காலத்தில் சரியான நேரத்தில் மூலதனத்தை திரட்டுவதற்கான நிறுவனத்தின் ஆற்றலே மதிப்பீட்டு உணர்திறன் ஆகும். எம்.எப்.பியின் நிலையான மூலதனத்தில் மற்றும் சொத்துக்களின் தரத்தில் முன்னேற்றம் காணப்பட்டால் நிறுவனத்தின் நிலையான தன்மைக்கு திருத்தம் ஏற்படலாம். எம்.எப்.பி ஆனது ஒழுங்குமுறையான மூலதனத் தேவையை பூர்த்தி செய்யத் தவறும் பட்சத்தில் அதன் மதிப்பீடு தரமிறக்கப்படலாம்.

## முக்கிய மதிப்பீட்டு இயக்கிகள்

**கடன் சவால்கள்**

ஓழுங்குமுறை மையமூலதன தேவையை பூர்த்தி செய்ய கணிசமான போதுமான வெளியக மூலதனம் தேவை:2019 செப்டம்பர் இல் மல்டி பைனான்ஸின் (எம்.எப்.பி) மூலதனத்தின் உறுதியான நிகர மதிப்பு (ஒத்திவைக்கப்பட்ட வரிக்கு சரிசெய்யப்பட்டது) சுமார் LKR 600 மில்லியனாக இருந்தது, இது 2020 ஜனவரி க்குள் குறைந்தபட்ச மூலதனத் தேவை LKR 2.0 பில்லியனாக காணப்பட வேண்டும் என கட்டுப்பாட்டாளரால் நிர்ணயிக்கப்பட்ட தொகையை விடக் குறைவாக உள்ளது. மல்டி பைனான்ஸ் குறைந்தபட்ச மூலதன தேவைப்பாட்டிற்கு இணங்காததன் காரணத்தினால் மத்திய வங்கியானது அதன் கடன் வழங்குதல் மற்றும் வைப்புக்களை ஏற்பதில் கட்டுப்பாடுகளை விதித்தமையினால் நிறுவனத்தின் வளர்ச்சியில் அது தாக்கத்தை செலுத்தியது. தற்போது நிறுவனம் இரண்டு நிறுவன முதலீட்டாளர்களுடன் இரண்டு பரஸ்பர நிதி திரட்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது, இந்த பரிவர்த்தனைகள் முடிந்தவுடன்

குறைந்தபட்ச மூலதனத் தேவையை முழுமையாகக் பூர்த்தி செய்ய முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது. நிதி திரட்டும் நடவடிக்கைகளை சரியான நேரத்தில் முடிப்பது முன்னோக்கி செல்வதற்கு ஒரு முக்கிய காரணியாக அமையும்.

சொத்து தர குறிகாட்டிகளின் குறிப்பிடத்தக்க சரிவு:MFP இன் மதிப்பீடு நிறுவனத்தின் சொத்து தரக் குறிகாட்டி காரணியில் தொடர்ந்து பலவீனமான நிலையில் உள்ளது, அங்கு மொத்த NPAவிகிதம் 2018 ஜூன் இல் 10.5% ஆக உயர்ந்தது (2018 மார்ச் இல் 9.8%) 2019 மார்ச் இல் NPA விகிதம் சுமார் 11.6% ஆக இருந்தது. பின்னர், எம்.எப்.பி NPA அளவுகளில் மிகை அதிகரிப்பு கண்டது, பெரும்பாலும் சந்தையில் macro- Political சவால்கள் காரணமாக மொத்த NPA விகிதம் 2019 செப்டம்பர் இல் சுமார் 18.8% ஆக உயர்ந்தது. NPA களின் மிகையான அதிகரிப்பு முதன்மையாக நிறுவனத்தின் SME தொடர்பான வெளிப்பாடுகளிலிருந்து வந்தது, ஏனெனில் SME துறை குறிப்பாக இந்த காலகட்டத்தில் பாதிக்கப்பட்டது. அத்துடன் கடன்வழங்குதலில் காணப்பட்ட கட்டுப்பாடுகளும் குறித்த காலப்பகுதியில் NPA விகிதங்களின் மிகையான அதிகரிப்புக்கு பங்களித்ததாக ஐ.சி.ஆர்.ஏ லங்கா குறிப்பிடுகிறது. முன்னோக்கி செல்லும்போது MFP அதிகரிக்கும் சரிவுகளை கட்டுப்படுத்துவதற்கும் அதன் ஒட்டுமொத்த சொத்து தரக் குறிகாட்டிகளை மேம்படுத்துவதற்குமான அதன் திறன் முக்கியமானது,

நீடித்த பலவீனமான லாபம்: எம்.எப்.பி கடந்த 5 ஆண்டுகளாக தொடர்ச்சியான இழப்புகளை பதிவு செய்துள்ளது.மல்டி பைனான்ஸ் 2019 செப்டம்பர் உடன் முடிவடைந்த 6 மாதத்திற்கு LKR 61 மில்லியனை தேறிய நட்டமாக அறிவித்ததுடன், 2019 நிதியாண்டில் LKR 63 மில்லியன் நட்டத்தை பதிவாக்கியது. முதன்மையாக வட்டி வருமானம் குறைதல் மற்றும் சொத்து தரம் மோசமடைவதால் அதிக கடன் செலவு ஏற்பட்ட காரணத்தினாலேயே 6மாத காலகட்டத்தில் பரந்த நட்டத்தை பதிவாக்கியது. கடன் வழங்குவதில் வீழ்ச்சி ஏற்பட்டமையினால் எம்.எப்.பி ஆனது NIM இல் 2019 நிதியாண்டில் 12.5 % இல் இருந்து 2019 செப்டெம்பர் முடிவடைந்த 06 மாதத்திற்கு 10.4% இற்கு இக்காலக்கட்டத்தில் வீழ்ச்சியை கண்டது. மேலும், நிறுவனமானது இந்த காலக்கட்டத்தில் கடன் செலவில் மிகையான அதிகரிப்பை சந்தித்தது. அதாவது 6மாதத்திற்கு சுமார் 5.7% ஆக அதிகரித்துள்ளது, இது நிதியாண்டில் சுமார் 2.7% ஆக இருந்தது. இக்கடன் செலவின் அதிகரிப்புக்கு முதன்மையாக அமைந்தது இந்த காலகட்டத்தில் செயல்படாத SME/ வணிக கடன்களும் ஆகும். என நிறுவனம் கண்டறிந்தது.

**பகுப்பாய்வு அணுகுமுறை**

மதிப்பீடுகளுக்கு வருவதற்கு ஐ.சி.ஆர்.ஏ லங்கா அதன் மதிப்பீட்டு முறைகளை கீழே குறிப்பிட்டுள்ளபடி பயன்படுத்தியுள்ளது

**பொருந்தக்கூடிய அளவுகோல்களுக்கான இணைப்புகள்:**

வங்கி சாரா நிதி நிறுவனங்களுக்கான ஐ.சி.ஆர்.ஏ லங்காவின் கடன் மதிப்பீட்டு முறை

**நிறுவனம் பற்றி:**

மல்டி பைனான்ஸ் பி.எல்.சி (எம்.எப்.பி) என்பது உரிமம் பெற்ற நிதி நிறுவனமாகும். இது குத்தகை, வாடகை கொள்முதல், வணிக கடன்கள், மல்டி டிராப்ட், எஸ்.எம்.இ நிதி, பாவனிங், மைக்ரோ நிதி மற்றும் வர்த்தக நிதியுதவி போன்ற தயாரிப்புகளை வழங்குகிறது. 1974 ஒக்டோபர் 14 ஆம் திகதி ஒரு வரையறுக்கப்பட்ட பொறுப்பு நிறுவனமாக கண்டியில் கூட்டிணைக்கப்பட்டது. நிறுவனத்தின் சாதாரண பங்குகள் 2011 இல் கொழும்பு பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்டன. 2017 பிப்ரவரி இல், பன்முகப்படுத்தப்பட்ட கூட்டு நிறுவனமான பேர்வே ஹோல்டிங்ஸ் (பிரைவேட்) லிமிடெட் ஆனது எம்.எப்.பி இன் 65% ஆன பங்கை கொள்வனவு செய்தது.

2019 மார்ச் 31, உடன் முடிவடைந்த ஆண்டில், எம்.எப்.பி ஆனது 1.5 பில்லியன் மொத்த சொத்தை அடிப்படையாகக் கொண்டு தேறிய நட்டமாக LKR 63 மில்லியனை பதிவு செய்தது. இது முந்தைய நிதியாண்டில் LKR 1.6 பில்லியன் மொத்த சொத்துத் தளத்தில் டLKR 17 மில்லியனின் தேறிய நட்டத்துடன் ஒப்பிடும்போது அதிகரித்த நட்டத்தை காட்டுகின்றது.

2019 செப்டம்பர் 30, உடன் முடிவடைந்த 6 மாதத்திற்கு LKR 1.4 பில்லியன் மொத்த சொத்துத் தளத்தில் LKR 61 மில்லியனுக்கும் தேறிய நட்டத்தை எம்.எப்.பி தெரிவித்துள்ளது.

## முக்கிய நிதி குறிக்காட்டிகள் (கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்டது)

| தொகை ரூபா மில்லியனில் | FY2018 | FY2019 | 6MFY2020 (கணக்காய்வுக்கு உட்படுத்தப்படாதது) |
|---|---|---|---|
| தேறிய வட்டி வருமானம் | 139 | 171 | 66 |
| வரிக்கு பின்னரான இலாபம் | (17) | (63) | (61) |
| தேறிய மதிப்பு(திருத்தப்பட்டது) | 774 | 661 | 601 |
| கடன் மற்றும் முற்பணம் | 1,197 | 1,181 | 978 |
| மொத்த சொத்துக்கள் | 1,634 | 1,485 | 1,443 |
| மூலதனத்தின் மீதான வருவாய் | -2.1% | -8.3% | -17.8% |
| சொத்துக்களின் மீதான வருவாய் | -1.2% | -4.1% | -8.3% |
| மொத்த NPA | 9.9% | 13.1% | 18.8% |
| தேறிய NPA | 5.6% | 4.5% | 6.6% |
| Capital Adequacy Ratio | 66.4% | 36.8%* | 43.5% |
| Gearing (Times) | 0.9 | 1.1 | 1.1 |

2018 ஜீலை முதல் நடைமுறைக்கு வந்த போதுமான மூலதனத்தின் புதிய கணக்கெடுப்பினை அடிப்படையாகக் கொண்டது.

## கடந்த மூன்று ஆண்டுகளுக்கான மதிப்பீட்டு வரலாறு

| கருவி | தற்போதைய மதிப்பு (FY2020) | | | கடந்த 3 ஆண்டுகளுக்கான மதிப்பீட்டு வரலாற்றின் காலவரிசை | | |
|---|---|---|---|---|---|---|
| | வகை | மதிப்பு தொகை (LKR Mn) | திகதி மற்றும் மதிப்பு தை - 20 | திகதி மற்றும் மதிப்பு ஆடி- 19 | திகதி மற்றும் மதிப்பு புரட்டாசி - 18 | திகதி மற்றும் மதிப்பு FY 2018 |
| வழங்குனரின் மதிப்பீடு | N/A | N/A | (SL)B- (எதிர்மறை) | (SL)B- (எதிர்மறை) | (SL)B- (நிலையானது) | N/A |

## பகுப்பாய்வு தொடர்புகளுக்கு:

திரு. ரணசிங்க வெளிவத்த
+94 11 4339907
rasanga@icralanka.com

திரு. சஹில் உதானி
+91 22 61143429
sahil.udani@icralanka.com

## உறவுரீதியான தொடர்புகளுக்கு

திரு. டபிள்யு. தொன் பார்னபாஸ்
+94 11 4339907
wdbarnabas@icralanka.com

ICRA LANKA

*Subsidiary of*

**ICRA Limited**

*A Group Company of Moody's Investors Service*

CORPORATE OFFICE
Level 10, East Tower, World Trade Center, Colombo 01, Sri Lanka
Tel: +94 11 4339907; Fax: +94 11 2333307
Email: info@icralanka.com; Website: www.icralanka.com

© Copyright, 2019 ICRA Lanka Limited. All Rights Reserved.

ஐ.சி.ஆர்.ஏ லங்காவிற்கு உரிய விடயங்களை அதன் அனுமதியுடன சுதந்திரமாக பயன்படுத்தப்படலாம்

ஐ.சி.ஆர்.ஏ லங்கா மதிப்பீடுகள் மதிப்பிடப்பட்ட கடன் கருவிகளை வாங்க, விற்க அல்லது வைத்திருக்க பரிந்துரையாக கருதக்கூடாது. ஐ.சி.ஆர்.ஏ லங்கா மதிப்பீடுகள் கண்காணிப்பு செயல்முறைக்கு உட்பட்டவை. இது மதிப்பீடுகளில் திருத்தத்திற்கு வழிவகுக்கும். ஐ.சி.ஆர்.ஏ. ஐ.சி.ஆர்.ஏ லங்கா மதிப்பீடுகள் நிலுவையில் உள்ள சமீபத்திய தகவல்களுக்கு தயவுசெய்து எங்கள் வலைத்தளமான www.icralanka.com ஐப் பார்வையிடவும் அல்லது ஐ.சி.ஆர்.ஏ லங்காவின் அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளவும். இதில் உள்ள அனைத்து தகவல்களும் ஐ.சி.ஆர்.ஏ லங்காவால் மதிப்பிடப்பட்ட வழங்குநர் உட்பட துல்லியமான மற்றும் நம்பகமானவை என்று நம்பப்படும் மூலங்களிலிருந்து பெறப்பட்டுள்ளன.இருப்பினும், ஐ.சி.ஆர்.ஏ லங்கா மதிப்பிடப்பட்ட வழங்குநருக்கான எந்தவொரு கணக்காய்வு நடவடிக்கையோ அல்லது தகவல் வழங்கும் செயற்பாட்டையோ மேற்கொள்ளவில்லை. இங்குள்ள தகவல்கள் உண்மை என்பதை உறுதிப்படுத்த நியாயமான அக்கறை எடுத்துக் கொள்ளப்பட்டாலும், அத்தகைய தகவல்கள் எந்தவொரு உத்தரவாதமும் இல்லாமல் 'இருப்பது போலவே' வழங்கப்படுகின்றன, குறிப்பாக ஐ.சி.ஆர்.ஏ லங்கா,ஆனது அதனால் வழங்கப்பட்ட தகவலகளின் உண்மைத்தன்மை, நேரம் தவறாமை மற்றும் அதன் முழுமைத்தன்மை என்பவற்றுக்கு வெளிப்படையாகவோ அல்வது மறைமுகமாகவோ எந்தவொரு பிரதிநிதித்துவத்தையும் உத்தரவாதத்தையும் வழங்கவில்லை. மேலும்இ ஐ.சி.ஆர்.ஏ லங்கா அல்லது அதன் குழு நிறுவனங்கள் ஏதேனும் மதிப்பிடப்பட்ட வழங்குநருக்கு மதிப்பீட்டைத் தவிர வேறு சேவைகளை வழங்கியிருக்கலாம்.

இங்கு உள்ள அனைத்து தகவல்களும் கருத்து அறிக்கைகளாக மட்டுமே கருதப்பட வேண்டும். மேலும் இந்த வெளியீட்டின் எந்தவொரு பயன்பாட்டிலிருந்தோ அல்லது அதன் உள்ளடக்கங்களிலிருந்தோ பயனர்களுக்கு ஏற்படும் இழப்புகளுக்கு ஐ.சி.ஆர்.ஏ லங்கா பொறுப்பேற்காது.